# தமிழாசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் இயக்குநரின் செயல் முறைகள்!

தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநர் செயல் முறைகள், சென்னை -6

மு.மு.எண் .32215/டி3/2010,நாள் 3.12.2010

பொருள் : தொடக்கக் கல்வி - ஊக்க ஊதிய உயர்வு - நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்கள் ஊக்க ஊதிய உயர்வு வழங்குதல் - தெளிவுரை சார்ந்து.

பார்வை : 1. அரசாணை எண்.107/பள்ளிக்கல்வி துறை, நாள் 20.1.1976

2. அரசாணை எண்.1024/கல்வி அறிவியல் தொழில் நுட்பத்துறை, நாள் 9.12.1993

* * * * *

தொடக்கக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழாசிரியர்களுக்கு B.T., B.Ed., பயிலாமல் MA., உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு வழங்க உதவிக் கல்வி அலுவலர்கள் மறுப்பதாக தமிழ் ஆசிரியர் கழகங்கள் தெரிவிக்கின்றன.

கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கப்படுகிறது.

அரசாணை எண்.107, பள்ளிக்கல்வித்துறை நாள் 20.1.76ல் பத்தி 3ல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

Grade II Tamilpandits may be allowed two incentive advance increments either for B.T., or for MA., Advance increments may be allowed 2nd time for such teachers who after passing BT., Passes MA., of after passing MA., Passed BT., Advance increments shall not be allowed to them for passing M.Ed.,

எனவே அரசாணை நிலை எண்.107/ பள்ளிக்கல்வித்துறை நாள் 20.1.1976 மற்றும் அரசாணை எண்.1024/கல்வி/ நாள் 9.12.93 ஆகியவற்றிற்கு உட்பட்டு நடுநிலைப்பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணிபுரிபவர்கள் பி.எட்., அல்லது எம்.ஏ., முதலில் தேர்ச்சிப் பெற்றால் முதல் ஊக்க ஊதிய உயர்வும் பின்னர் எம்.ஏ., அல்லது பி.எட்., தேர்ச்சி பெற்றமைக்கு 2-ஆவது ஊக்க ஊதிய உயர்வும் அனுமதிக்கலாம் என்றும், ஆனால் ஒரு ஆசிரியரின் மொத்த பணிக்காலத்தில் 2 ஊக்க ஊதிய உயர்வு மட்டுமே அனுமதிக்கலாமென்றும் மேற்கண்டவாறு 2 ஊக்க ஊதிய உயர்வு பெற்றவர்கள் பின்னர் எம்.எட்., தேர்ச்சிப் பெற்றால் ஊக்க ஊதிய உயர்வு அனுமதிக்கக் கூடாது என்றும், தங்கள் அலகிற்குட்பட்ட அனைத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்குமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

http://www.kalvisolai.com/